The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No

(*b*) Does not arise.

Neyveli Lignite Briquette

* 508 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the various uses to which the raw briquette produced at the Briquette and Carbonisation plant at Neyveli can be put; and

(*b*) whether they can be used with advantage as fuel in steam locomotives, instead of sea-borne coal?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Raw lignite briquettes may be used as an industrial fuel where coal is being used at present.

(*b*) Tests conducted in this regard are not conclusive.

திரு. வை. சங்கரன் : சுட்ட கற்கரி போக, லிக்னைட்டிலிருந்து வரக்கூடிய வேஸ்ட்டிலிருந்து கான்க்ரிட் செய்யலாம் என்றும், அதைக் கட்டடம் கட்டுவதற்கும், ரோடு போடுவதற்கும் பயன் படுத்தலாம் என்றும் சொல்லப்படுகிறது. அது சம்பந்தமாக ஏதாவது பரிசிலனை செய்யப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'By-products of carbonisation' என்ற வகையில், அதாவது கரி அச்சுகள் செய்கின்ற போது சில உபபொருள்கள் அதிலிருந்து உற்பத்தியாகின்றன. அதைக்கொண்டு என்ன என்ன செய்ய முடியும் என்பதைப்பற்றி யெல்லாம் ராஜ்ய சர்க்காரிலே ஒரு கமிட்டி போட்டு ஆராயச் சொல்லியிருக்கிறோம்.

வெள்ளைக் களிமண்

* **509 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், குமளம்பட்டு காட்டில் எடுக்கப்படுகின்ற வெள்ளைக் களிமண் எங்குக் கொண்டுபோகப் படுகிறது ?

(இ) அதில் என்ன செய்கிறார்கள் ?

(உ) அரசாங்கத்திற்கு இதில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The white clay mined from the Kumalampattu Reserve Forest is used for the manufacture of fire bricks. The first lessee, M/s. Tube Suppliers (Private), Limited, Madras utilise the clay in their factory, Vadapazhani Refractory Works at Virugambakkam. Chingleput district while the second lessee, Sri G. Pattabi Reddi of Rajampalayam is supplying the white clay to the factories like The Stoneware Pipes (Madras), Limited, Trivellore, Chingleput district, which

12th November 1965]

are engaged in the manufacture of fire bricks. The other lessee, viz., M/s. Dalmia Cement (Bharat), Limited, Dalmiapuram, have not yet commenced mining operations in the areas leased out of them.

(c) A sum of about Rs. 2,800 (rupees two thousand and eight hundred only) per annum is collected from the above three lessees towards dead rent, surface rent and cesses.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : குறைந்த பட்சம் எத்தனை டன் வெள்ளைக் களி மண் கிடைத்தால் அந்த இடத்தில் பீங்கான் தொழிற்சாலை ஆரம்பிப்பார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிர்வாகம் சம்பந்தப் பட்டது அல்ல. தொழில் நுட்பம் சம்பந்தப்பட்டது. தனியாகக் கேள்வி போட்டால், அந்த நுட்பம் தெரிந்தவர்களைக் கேட்டுப் பதில் சொல்ல முடியும்.

சர்க்கரை ஆலை

* **510 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மேலும் ஒரு சர்க்கரை ஆலை துவங்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், எப்போது, பொதுத்துறையிலா, கூட்டுறவுத் துறையிலா, தனியார் துறையிலா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) The matter is under consideration.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, புதிய சர்க்கரை ஆலை ஒன்றைத் துவக்கும்போது, அதை வட ஆற்காடு மாவட்டத்திலேயே மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கும் தென் வேலூர் பகுதியில், செய்யாறு ரெவினியு டிவிஷனில் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சில விஷயங்கள் தான் பின் தங்கிய பகுதியில் செய்ய முடியும். சில விஷயங்கள் எங்கே இயற்கை வசதி இருக்கிறதோ அங்கே தான் செய்ய முடியும். இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கேற்ற அளவிற்கு எங்கே கரும்பு ஏராளமாகக் கிடைக்குமோ அங்கே தான் தொழிற்சாலை வைக்க முடியும். கரும்பு எவ்வளவு கிடைக்கிறது என்று கமிட்டி போட்டு ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன்படி பார்த்தால், இது வேலூர்-வடக்கு, வேலூர்-தெற்கு; வாலாஜா; ஆரணி தாலூக்காப் பகுதிகளில் வைக்கப்படலாம் என்பது ஒரு கருத்து, மற்றொன்று குடியாத்தம், ஆம்பூர், திருப்பத்தூர் வாணியம்பாடி பகுதியிலே வைக்க முடியும் என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.